தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# திருவாரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(01.05.2021 முதல் 05.05.2021)

அறிக்கை எண்: 35/2021 தேதி 30.04.2021

## திருவாரூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பதிவானது.

## திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (01.05.2021 முதல் 05.05.2021)

| கடந்த வார வானிலை (27.04.2021 முதல் 29.04.2021) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (01.05.2021 முதல் 05.05.2021) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 27/04 | நாள்-2 28/04 | நாள்-3 29/04 | தேதி | நாள்-1 01/05 | நாள்-2 02/05 | நாள்-3 03/05 | நாள்-4 04/05 | நாள்-5 05/05 |
| 0 | 0.7 | 0 | மழை (மி.மீ.) | 1 | 1 | 1 | 0 | 0 |
| 34 | 34 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 36 | 37 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 4 | 4 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 5 | 5 |
| 65-61 | 66-59 | 69-59 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-50 | 80-50 | 80-50 | 80-50 |
| 4 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 8 | 8 | 8 | 10 | 10 |
| தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | தெற்கு |

## திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். 01.05.2021 முதல் 03.05.2021 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

- ✓ கோடை இறவை பயிராக சித்திரைப்பட்டத்தில் ( ஏப்ரல் - மே) பயறுவகை பயிர்களை விதைக்க உகந்த இரகங்களான ஆடுதுறை 5, வம்பன் 5, வம்பன் 6 மற்றும் வம்பன் 8

போன்ற உளுந்து இரகங்களையும் வம்பன் 2 மற்றும் வம்பன 3 போன்ற பாசிப்பயறு இரகங்களையும் பயிரிடவும்.

- ✓ வரும் நாட்களில் மழையைப் பயன்படுத்தி கோடை உழவு செய்து களைகளை கட்டுப்படுத்துவதுடன் பூச்சிகளின் கூண்டுப் புழுக்களை அழிக்கவும்.
- ✓ மண்ணின் ஈரத்தன்மையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழிஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும்.
- ✓ மாட்டுத் தொழுவத்திற்கு அலுமினியத்தாலான மேற்கூரை இடுவதால் கால்நடைகளுக்கு வெய்யிலின் தாக்கம் குறைக்கப்படுகிறது.

## குறுஞ்செய்தி

- ✓ மண்ணின் ஈரத்தன்மையை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு, சணப்பை மற்றும் கொழீஞ்சி போன்றவற்றைத் தெளிக்கவும்.

**இயக்குநர்**